உ

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டதேவன் மெல்லடி வாழ்க

# சேரன்மாதேவி
# அம்மைநாதசாமி கோவில்
# வரலாறு.

---




ஆசிரியர் :

திருவாளர் இ. மு. சுப்பிரமணியபிள்ளையவர்கள்,
அமைச்சர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்,
சங்கரநயினார்கோவில்.



கோவில் வெளியீடு.

1944.

விலை அணா இரண்டு

உ

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டதேவன் மெல்லடி வாழ்க

# சேரன்மாதேவி அம்மைநாதசாமி கோவில் வரலாறு.

ஆசிரியர் :

திருவாளர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்,

அமைச்சர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்,

சங்கரநயினார்கோவில்.

பார்வையாளர் :

செந்தமிழ்ப் புரவலர் இராவ் பகதூர் திருவாளர்

கோ. ம. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள்,

சென்னை.

வெளியிடுவோர் :

திருவாளர் கு. பக்தவத்சலம் பிள்ளையவர்கள்,

ஆட்சியாளர்.

(சென்னை அறநிலையக் காப்புக் கழகத்தார் ஆணையின்படி வெளி வருகிறது)

கோவில் வெளியீடு

1944.

விலை அணா இரண்டு

# முகவுரை

இவ்வரலாற்றை எழுதுவதற்கு வேண்டும் துணைபுரிந்த கோவில் ஆட்சியாளர் திருவாளர் கு. பக்தவத்சலம் பிள்ளையவர்களுக்கும், இதனைப் பார்வையிட்டுதவிய செந்தமிழ்ப் புரவலர் திருவாளர் கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார் அவர்களுக்கும் எமது நன்றி என்றும் உரியது.

தி. மு. சுப்பிரமணியன்

17—7—44.

உ

திருச்சிற்றம்பலம்

மெய்கண்ட தேவன் மெல்லடி வாழ்க.

# சேரன்மாதேவி அம்மைநாதசாமி கோவில் வரலாறு

காப்பு

*அம்மைக்கு நாதன் அருட்சேரன் மாதேவிச்*
*செம்மை வரலாறு செப்பிடவே—இம்மையிலும்*
*நன்மைதரும் ஆவுடை நாயகியே தஞ்சமெனப்*
*பொன்னடிகள் பூண்டோம் புகழ்ந்து.*

## ௧. இடஅமைப்பு

### சில்லா, தாலுகா, போக்குவரவு

சேரன்மாதேவி திருநெல்வேலிச் சில்லாவிலுள்ள அம்பாசமுத்திரம் தாலுகாவைச் சேர்ந்தது. பாண்டிய நாட்டில் ஒப்புயர்வற்ற நீர்வள நிலவளம் உடையது அம்பா சமுத்திரம் தாலுகாவே. அதன் காரணம் எந்தக் கோடையிலும் வற்றாத பெருக்கையுடைய தண்பொருநை யாறு மலையிலிருந்து கீழே இறங்கிவரும் முதல் இடம் இந்தத் தாலுகாத்தான்.

இரயில் வழியாகச் சென்னையிலிருந்து தஞ்சாவூர் மாய வரம் வழியாகச் சேரன்மாதேவி 456 கல் தொலைவிலிருக்

# முகவுரை

இவ்வரலாற்றை எழுதுவதற்கு வேண்டும் துணைபுரிந்த கோவில் ஆட்சியாளர் திருவாளர் கு. பக்தவத்சலம் பிள்ளையவர்களுக்கும், இதனைப் பார்வையிட்டுதவிய செந்தமிழ்ப் புரவலர் திருவாளர் கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார் அவர்களுக்கும் எமது நன்றி என்றும் உரியது.

தி. மு. சுப்பிரமணியபிள்ளை

17—7—44.

உ

திருச்சிற்றம்பலம்

மெய்கண்ட தேவன் மெல்லடி வாழ்க.

# சேரன்மாதேவி அம்மைநாதசாமி கோவில் வரலாறு

காப்பு

அம்மைக்கு நாதன் அருட்சேரன் மாதேவிச்
செம்மை வரலாறு செப்பிடவே—இம்மையிலும்
நன்மைதரும் ஆவுடை நாயகியே தஞ்சமெனப்
பொன்னடிகள் பூண்டோம் புகழ்ந்து.

## க. இடஅமைப்பு

### சில்லா, தாலுகா, போக்குவரவு

சேரன்மாதேவி திருநெல்வேலிச் சில்லாவிலுள்ள அம்பாசமுத்திரம் தாலுகாவைச் சேர்ந்தது. பாண்டிய நாட்டில் ஒப்புயர்வற்ற நீர்வள நிலவளம் உடையது அம்பாசமுத்திரம் தாலுகாவே. அதன் காரணம் எந்தக் கோடையிலும் வற்றாத பெருக்கையுடைய தண்பொருநை யாறு மலையிலிருந்து கீழே இறங்கிவரும் முதல் இடம் இந்தத் தாலுகாத்தான்.

இரயில் வழியாகச் சென்னையிலிருந்து தஞ்சாவூர் மாயவரம் வழியாகச் சேரன்மாதேவி 456 கல் தொலைவிலிருக்

கிறது; திருச்சி விழுப்புரம் குறுக்கு வழியாக இது 416 கல் இருக்கிறது. திருநெல்வேலிக்கும் அம்பாசமுத்திரத்துக்கும் நடு மையத்தில் இவ்வூர் விளங்குகின்றது; கிழக்கே திருநெல்வேலியும் பத்து மைல், மேற்கே அம்பாசமுத்திரமும் பத்துக்கல். தென்காசி மேற்கே 33 கல் தூரத்தி லுள்ளது. இரயிலடியிலிருந்து கோவில் இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது.

இங்கிருந்து திருநெல்வேலிக்கும், தென்காசிக்கும், களக்காட்டிற்கும், நான்குநேரி நாகர்கோவில் கன்னியாகுமரிக்கும், அம்பாசமுத்திரம் பாவநாசம் மலைமேல் அணைக்கட்டிற்கும் அடிக்கடி வாடகை மோட்டார் வண்டிகள் போய்வருகின்றன. இங்கே பல திசைகளிலிருந்து மோட்டார் வண்டிகள் வந்து கூடுகின்றன. இக்கூடிடம் இரயிலடியின் அருகிலேயே இருக்கிறது. ஊருக்குள்ளே போகவர வாடகைக்கு இரட்டை மாட்டு வண்டிகள் எப்போதும் காத்துக்கொண்டிருக்கும்.

## இரயிற் பாலம்

இரயில் மதுரையிலிருந்து திருநெல்வேலிக்கும் தூத்துக்குடிக்கும் 1—1—1876ல் வந்தது. திருநெல்வேலியிலிருந்து கல்லிடைக்குறிச்சிக்கு 1902லும், அங்கிருந்து செங்கோட்டைக்கு 1903லும், அதிலிருந்து கொல்லத்துக்கு 1904லும் இரயில் சென்றது. இரயில் தன்பொருநையாற்றைத் தாண்டும் இடத்தில் ஒரு பெரிய பாலம் இருக்கிறது. இவ்வாற்றில் அடிக்கடி பெரிய வெள்ளம் வருவது வழக்கம். 1877ல் 28¼ அடி உயரம் வெள்ளம்

வந்தது; 4—12—1914ல் வெள்ளத்தின் உயரம் 26 அடி. 1902ல் கட்டிய இரயிற்பாலம் 1914 வெள்ளத்தில் சிறிது பழுதாகிச் செப்பனிடப் பெற்றது. பின் 17-12-1923ல் வந்த வெள்ளம் இதனை மறுபடி கெடுத்து விட்டது. அதனால் இப்போதுள்ள அருமையான இருப்புப்பாலம் தோன்றுவதாயிற்று. இதில் இப்போது நான்கு பெரிய திண்டுகளும் ஐந்து கண்களும் இருக்கின்றன. இப்பாலத்தின் மேல் ஐந்து இருப்பு ஏணிப் பந்தல்கள் ஒரே தொடர்பாக அமைந்துள்ளன. இப்பாலத்தின் அடியிலே ஆற்றின் தென்கரையில் நமது அம்மைநாதர் கோவில் இருக்கிறது.

1903ல் சேரன்மாதேவியிலிருந்து பணகுடி வழியாக நாகர்கோவில் முதலிய இடங்களுக்கு இரயில் போட ஏற்பாடாயிற்று. ஆனால் திருவாங்கூர் அரசாங்கத்தார் அதற்குத் தடை கூறினர். அதனால் அவ்வழி நின்றுவிட்டது.

### மலை, குன்று, ஆறு, ஏரி

இவ்வூருக்குத் தெற்கே ஒன்றரைக்கல் தூரத்தில் கொழுந்துமாமலை இருக்கிறது. இது மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு கிளையே. இம்மலையடியில் இரண்டு முருகன் கோவில்கள் உள; ஒன்று கிழக்கோரத்திலும் மற்றொன்று மேற்கோரத்திலும் உள்ளன. மேற்குத் தொடர்ச்சிமலை என்பது தெற்கே கன்னியாகுமரியிலிருந்து மேற்குக்கடற்கரை ஓரமாக நெடுந்தூரம் ஒரே தொடராகப்போதலினாலே இப்பெயர் பெற்றது. கொழுந்துமா மலையில் மிக உயர்ந்த மருந்துப் பச்சிலைகள் கிடைக்கின்றன.

பொதிகை மலையிலிருந்து தோன்றிவரும் தண்பொரு நையாறு கோவிலருகே வடபுறம் கிழமேலாக ஓடிவருகி றது. கோவிலிலிருந்து இவ்வாற்றில் இறங்கி முழுகுவதற்கு நல்ல படித்துறைகள் உள்ளன. இந்த ஆறு மிகவும் புண் ணியமான ஆறு; ஆனதால் மார்கழிமாதம் வியதீபாத யோக நாளன்று இந்த இடத்தில் பெருங்கூட்டம் கூடுகின் றது; அந்த நாளில் கங்கையாறு இங்கே வந்து முழுகித் தன் பாவங்களையெல்லாம் போக்கிக் கொள்கிறது என்று புராணம் கூறுவதால் இதனை மக்கள் நம்பி இங்கே வந்து கூடுகின்றனர்.

கல்விடைக்குறிச்சிக்குச் சிறிது மேற்கே பொருநையி லிருந்து பிரிந்துவரும் கன்னடியன்கால்வாய் இக்கோவிலி லிருந்து ஒன்றரைமைல் தொலைவில் தெற்கே இருக்கிறது. இக்கால்வாய் ஆற்றங்கரைவரை சிறு சிறு வாய்க்கால் களின் வழியே ஓடிவந்து அளவிடமுடியாத நஞ்சை நிலங் களைத்தட்டின்றி விளைவிக்கின்றது. இதுவே சேரன்மா தேவியாருக்குக் குளிக்கவும் குடிக்கவும் பயன்பெறுகி றது ; இதிலே தண்ணீர் வராத ஏப்பிரல் மே மாதங்களி லும் கூட இதன் நீரே ஊரின் நடுவிலுள்ள தெப்பக்குளங் களில் நிரப்பப்பெற்று எடுக்கப்பெறுகிறது. அக்காலத்தில் இவ்வூர் மக்கள் குளிப்பதற்கு ஆற்றுக்கே போய் வருகி றார்கள். ஊரின் இடையில் பல சிறு சிறு குளங்கள் உள்ளன.

## மக்கள் தொகை, தட்பவெப்பம், தங்கும் இடம்

தண் பொருநை யாற்றுக்கும் கன்னடியன் காலுக்கும்

இடையே எங்கும் நஞ்சை நிலங்களினாலே சூழப்பெற்று இவ்வூர் விளங்குகின்றது. நெடுக வானளாவிய மரங்களிருக்கின்றன. ஆதலினாலே, மிகக் கொடிய வெப்பத்தை உடையதேனும் இவ்வூர் வாழ்க்கைக்கு வசதியானது. அடிக்கடி சாரலும் இங்கே பெய்யும்.

1911-ல் கூனியூர், வடக்குக்காருகுறிச்சி, சேரன்கோவிற்பத்துடன் கூடியிருந்த இவ்வூரின் மக்கள் தொகை 12150. இப்போது 1941-ல் எடுத்த ஆட்கணக்குப்படி கூனியூர், சேரன்கோவிற்பத்துடன் கூடிய இந்நகராட்சியிலுள்ள வீடுகள் 2367 ; ஆண் 4164 + பெண் 4790 = ஆக மொத்தம் மக்கள் தொகை 8954.

நாட்டாண்மைக்கழக ஆட்சியிலுள்ள வழிப்போக்கர் விடுதியொன்றும், அரசாங்க வழிப்போக்கர் விடுதியொன்றும் ஆக இரண்டு வழிப்போக்கர் விடுதிகள் தங்குவதற்கு வசதியாக இருக்கின்றன. ஆற்றங்கரையில் கன்னடியன் சத்திரம் உளது.

பிறசிறப்புக்கள்

திருநெல்வேலிச் சில்லாவிலுள்ள எட்டுத்தாலூகாக்களும் இரண்டிரண்டாக நான்கு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளன ; அப்பிரிவில் ஒன்று அம்பாசமுத்திரம் நான்குநேரித்தாலூகாக்கள் ; இதற்குத் தலைநகரம் சேரன்மாதேவியாம்; இதன் தலைவர் ஒரு சப்கலெக்டர்; அவருடைய வேலை நிலையமும் நாட்டாண்மைக்கழக மருந்துச்சாலையும், பத்திரப்பதிவு நிலையமும், நாட்டாண்மைப் பொறிவலாளர்


**(L. F. Engineer),** அரசாங்கப் பொறிவலாளர், போலீசுச் சில்லாத் துணைஅதிகாரி ஆகிய இவர்களுடைய வேலை நிலையங்களும், ஊராட்சி வேலை நிலையமும் அஞ்சல் நிலையமும் இருக்கின்றன.

மின் விளக்குகள் எங்கும் மின்னுகின்றன. இரண்டு அரிசிப்பொறிச்சாலைகளும், ஓர் உயர் ஆரம்பப் பள்ளியும், நாட்டாண்மை ஆண் பெண் பள்ளிக்கூடங்களும் உள. உயர் கல்விக்கு ஒன்றரை மைல் தூரத்தில் கிழக்கே பத்தமடை உயர் பள்ளிக்கூடம் விளங்குகின்றது. குருகுலம் என்பது தக்கபொருளுதவியுடன் தொடங்கப்பெற்றது; ஆனால் சரியான முறையில் இது நடைபெறாமையினாலே பூசலில் முடிந்து, இப்போது அரசாங்கத்தினர் மேற்பார்வையில் ஆதி திராவிட மாணவர் விடுதியாக இது பயன் பெற்றுவருகிறது.

இவ்வூரிலே குடியிருக்கும் பட்டசாலியர், செங்குந்த முதலியார்கள், இல்லத்தார், கோலியர் என்ற வகுப்பினர் நெசவுத்தொழிலில் இணையற்றவர். மேலாடைகள், நல்லவேட்டிகள், துண்டுகள், நூற்சேலைகள், ஊடுபட்டுச் சேலைகள், பட்டுச்சேலைகள் அருமையாக நெய்யப் பெறுகின்றன. இங்கே வியாழக்கிழமைதோறும் சந்தை கூடுகிறது. இவ்வூரருகே முதுமக்கட்டாழிகள் பல வெட்டி யெடுக்கப்பட்டுள்ளன; அதனால் இவ்வூரின் தொன்மை நிலைபெறுகிறது.

இவ்வூர் கோவில்களுக்குப் பெயர்போனது. வைத்தியநாதப்பெருமான் கோவில், அப்பன் வேங்கடாசலபதி கோவில், தெய்வீச்சரமுடையார் கோவில், இராமசாமி

# அம்மைநாதர் கோவிற் படம்




## படவிளக்கம்

1. கருப்பக்கிரகம்
2. அர்த்தமண்டபம்
3. மாமண்டபம்
4. கூத்தர்
5. கருவேலம்
6. மணிமண்டபம்
7. மடைப்பள்ளி
8. தெற்கணாமூர்த்தி
9. நால்வர்
10. ஏழுகன்னியர்
11. பிள்ளையார்
12. திருவிழாநாதர்
13. ஷை சிறு மூர்த்தி
14. விசுவநாதர் விசாலாட்சி
15. முருகன்
16. சண்டேசர்
17. }
18. } அறைகள்
19. }
20. கூத்தர்
21. மதி
22. சூரியன், அதிகாரநந்தி
23. கொடிமரமண்டபம்
24. வேம்பு
25. திருமணமண்டபம்
26. பள்ளியறை
27. சேர்
28. மண்டபங்கள்
29. சாத்தன்
30. வாகன அறை
31. வயிரவர்
32. வேலைநிலையம்
33. அரசகோபுரவாசல்
34. அனுப்புமண்டபம்
35. சங்கிலிப்பூதத்தான்
36. பழையதவமண்டபம்.

கோவில், நடுவுள்அப்பர் கோவில், செங்கோடையன் சாத்தாகோவில், சாத்துப்பால் விநாயகர் கோவில், எட்டுச் சாத்தாகோவில்கள் என்பன பிற முக்கியமான கோவில்கள்.

சோன்கோவிற்பத்து என்பது வைத்தியநாதர் கோவிலுக்குத் தெற்கேஉள்ள இவ்வூரின் பகுதி. இங்கே சோன் கோவில், அதாவது அரண்மனை, இருந்ததனாலே இப்பெயர் உண்டாயிற்று என்று அறிஞர் கூறுகின்றனர். இதிலே தான் இரயிலடியும், அதற்குத் தெற்கே சிறிது தூரத்தில் சப்கலெக்டர் மாளிகையும் இருக்கின்றன.

## ௨. கோவில்.

### தோற்றம், அகலநீளம்

இரயிற்பாலத்தின் அருகில் ஆற்றின் தென்கரையில் கிழக்கே பார்க்க அழகான சிறிய அரசகோபுரத்துடன் கோவில் விளங்குவது காண்போர் கண்ணுக்கும் உள்ளத்துக்கும் தக்க விருந்தாகின்றது. இதன் அகலமும் நீளமும் அமைப்புப் படத்திற் காண்க.

### பலபகுதிகள், சுற்றுக்கள், மூர்த்திகள்

கோவில் இரண்டு பகுதிகளாக இருக்கிறது. வடக்குப்பகுதி அம்மைநாதர் திருக்கோவில், தெற்குப் பகுதி ஆவுடையம்மை திருத்தளி. பெருமான்கோவிலின் கருப்பக்கிரகத்தில் அம்மை நாதர் தாமே முளைத்தெழுந்த மூர்த்தியாகக் காட்சியருளுகின்றார். இவர் திருமேனி உளிப்

படாதது. அர்த்தமண்டபந்தாண்டி மாமண்டபத்துக்கு வருவோம். இங்கே திருவாயில் காவலரும் அனுக்கைப் பிள்ளையாரும் நடுவே நந்தியும் இருக்கின்றனர். தெற்கே பார்க்கக் கூத்தப்பெருமான் சிவகாமியம்மையுடனும் காரைக்காலம்மையுடனும் எழுந்தருளியிருக்கின்றார். வடகிழக்கு மூலையில் கருவேலம் இருக்கிறது. மணிமண்டபத்தில் வடக்கோரத்திலுள்ள தூணில் இக்கோவிலைக் கண்ட உரோம முனிவருடைய திருவுருவம் காணப்பெறுகிறது. இதிலே ஒரு புதுமையும் உளது. அதாவது இரண்டு பெண்களுடைய உருவங்கள் உரல் உலக்கையுடன் அமைந்து விளங்குகின்றன. இதைப்பற்றி ஒருவரலாறு சொல்லப்பெறுகிறது. அக்காளும் தங்கையுமாகிய இரண்டு பெண்கள் நெல் குத்திப் பிழைத்து வந்தனர்; அவர்களுக்குப் பெரும்பொருள் திரண்டது; தாங்கள் உடற்பாட்டினாலே தேடிய பொருளை அப்பெண்கள் இக்கோவிலைக் கட்டுவதிலே பயன்படுத்தினர். அதனாலேயே அவர்களுடைய திருவுருவம் பொருளுக்குத் துணையாயிருந்த உரல் உலக்கைகளுடன் அத்தூணில் செதுக்கப்பெற்றன" என்பதுவே அவ்வரலாறு.

உட்சுற்று வருவோம். தென் கிழக்கில் மடைப்பள்ளி உளது. தெற்குச் சுற்றில் தெற்கணாமூர்த்தியும், அப்பர் சுந்தரர் சம்பந்தர் சுரதேவரும், ஒன்பது கன்னியரும், உரோம முனிவர் புளியம்பழமுனிவர் எண்கோண முனிவர் ஆகிய முனிவர்களும் கன்னிப்பிள்ளையாரும் இருக்கின்றனர். மேற்குச் சுற்றில் திருவிழா நாயகர் மண்டபம் உளது. அம்மையின் புதியமேனி கண்கவர் வனப்புடையது; பழைய திருமேனி கருவேலத்தில் இருக்கிறது.

பின்வரும் திருவிழா மூர்த்திகள் இருக்கின்றன:—அத்திர தேவர், பிள்ளையார், சீபலிநாயகர், சந்திரசேகரர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனர், திருஞான சம்பந்தப் பிள்ளையார், மாணிக்கவாசகர், சேரமான் பெருமாள், அதிகாரநந்தி, முருகன், அகத்தியர், கங்காளநாதர், சண்டேசர்.

விசுவநாதரும் விசாலாட்சியும் மேற்குச் சுற்றில் உள்ளார்கள்; வடமேற்கில் வள்ளி தேவயானையுடன் முருகன் இருக்கின்றார். வடக்குச் சுற்றில் யானைத் திருமகளும் சனியும் சண்டேசரும் உள்ளனர். சிவகாமியம்மையுடனும் காரைக்காலம்மையுடனும் கல் திருவுருவில் கூத்தப் பெருமான் இருக்கின்றார். கிழக்குச் சுற்றில் தண்மதியும், சூரியனும் அதிகார நந்தியும் இருக்கிறார்கள். மணிவாசலைத்தாண்டி வரிசையாகக் கொடிமரமும் நந்தியும் பலிபீடமும் உள்ள கொடிமர மண்டபம் இருக்கிறது; இதில் திருமுழுக்கு மண்டபமும் திருமாலைக் கட்டும் வடக்கே வாகன அறையும் தெற்கே நெற்சேரும் உள. வெளிச் சுற்றுவந்து குடைவருவாசலுக்கு வந்தால் அழகான அரச கோபுரம் மேலே திகழ்வது புலனுகும். கோபுரம் ஐந்து தட்டுக்களுடன் இருக்கிறது. இதன் உயரம் 63 அடி.

அம்மை ஆவுடைத்தாய் திருக்கோவிலில் கருப்பக்கிரகத்தில் அம்மை எழுந்தருளியிருக்கின்றாள். மணிமண்டபம் தாண்டி மாமண்டபம் வந்தால் தென்புறம் பிள்ளையாரும் நடுவே நந்தியும் இருக்கின்றனர். வடபுறம் அழகான பள்ளியறை இருக்கிறது.

**காலம், முழுக்கு**

திருவனந்தல், காலசந்தி, உச்சிக்காலம், மாலைப்பூசை, அர்த்தயாமம் ஆகிய காலங்களில் பூசனையும் திருவனந்தல் தவிர நான்கு காலங்களிலும் திருமுழுக்கும் நடைபெறுகின்றன.

**தீர்த்தம்**

தண்பொருநை ஆறே தீர்த்தம்.

## ரு. சுற்றுக்கோவில்.

சுற்றுக்கோவில் ஒன்றும் இல்லை.

## சு. சிற்பச் சிறப்புகள்.

**விமானங்கள், கோபுரம்**

கோபுரம் பேரழகுடையது; அம்மை கோவிலிலும் அம்மைநாதர் கோவிலிலும் உள்ள விமானங்கள் நல்ல வேலைப்பாடு உடையன.

**வாகனங்கள்**

சூரனும் நான்குதலைகளும், பித்தளைத் தகடு பொதிந்த இடபங்கள் 2, பூங்கோவில் 2, இந்திர விமானம் 2, பல்லக்கு, யானை, அன்னம், மயில், கூத்தர் சப்பரம், கங்காளநாதர் சப்பரம், திருக்கலியாணத்தவச் சப்பரம், பூதம், சிங்கம், காமதேனு, வெட்டுங்குதிரை, சிறிய சப்பரங்கள் 3 என்னும் இவை உள.

## ௫. புராண வரலாறு

### தலபுராணம்

இக்கோவிலுக்குத் தனிப்புராணம் இல்லை. திருநெல்வேலித் தலபுராணம் இக்கோவில் வரலாறு கூறுகின்றது. அதன் ஆசிரியர் திருநெல்வேலியில் திருவருள் பெற்று விளங்கிய நெல்லையப்பபிள்ளையவர்களாவர். இக்கோவில் வரலாறு "உரோமசேசுர தீர்த்தச் சருக்கம்" என்ற தலைப்பில் இருபத்தெட்டுப் பாடல்களில் அமைந்திருக்கிறது. அதன் சுருக்கமும் சில பாடல்களும் கூறுவோம்.

"உரோமச முனிவன் கைலாசமலையையடைந்து நித்தியத்துவம் வேண்டுமென்றுகேட்டுப் பெருமான் ஆணைப்படி தண்பொருநையின் தென்கரை யடைந்து ஆலமரத்தின் அடியிற் சிவலிங்கம் கண்டு பூசனை புரிந்தான்.

"அத்தனை ஆதியானை அம்மைநாயகனை அஞ்சொல்
நித்யகல் யாணித்தாயை நெறியொடு பூசைசெய்தே
சுத்தநன் மலர்கள் ஏந்தித் துணையடிக் கமலம்தூவிப்
பத்தியோடெதிரேநின்று பகர்துதி பலவும்சொல்வான் 15

"அண்ணலே அமுதே ஆதி அமலனே அரனே அந்தி
வண்ணனே உமையோர்பாகா மதியணி மவுலியானே
கண்ணுதற் பொருளேவெய்ய கடல்விட முண்டதேவே
நண்ணியிங் கிருந்த அம்மை நாதனே கருணையானே. 16

"சுத்தமெஞ் ஞானமூர்த்தி சுகானந்த ரூபத்தானே
நித்தனே அன்னையாகி நிலமெலாம் உதவிக் காத்து
முத்தலைச் சூலம் ஏந்தி முடிவுசெய் விக்கும் தேவே
அத்தனே அம்மைநாதா அழல்விழி நுதலினனே.

"பரவெளிப்பொருளேசெங்கைப்பாசனேபலிஉண்போனே
கரியெனும்பதியாய்ப் பாசக்கட்டறுத் துயிரைக்காத்து
விரைமலர்ச் சரணம் நல்கும் வித்தைமந் திரத்தினானே
அரவங்கணங்கள் பூண்ட அம்மைநாயகனே போற்றி. 18

"என்றிந்த வாறு நாளும் இணையடி தொழுதுபோற்றி
நன்றுயர் பொருளையாடி நம்பனார் அம்மை நாதர்
துன்றுபொற் கோயில் செய்து தூயகோ புரங்கள் செய்து
சென்றுயர் மாடமேடை திருமதில் சிகரம் செய்தான். 19

"மற்றுநீள் ஆலயத்து வளமெலாம் பெருகச்செய்து
சுற்றுவீ திகளும் செய்து தூயதேர் கொடிமரம்சூழ்
நற்றவர் உறையும் சாலை நலம்பெறு குடிகள் ஏற்றிக்
கொற்றநல் விழாவும்செய்து குலவிஅங்குறையும்நாளில் 20

"நிலைபெறு முனிவன் அந்த நித்தியம் பெறவே எண்ணி
மலைமகள் பாகனார்தம் மலரடி வழுத்தி நின்றான்
அலைநதி அரவுகொன்றை ஆத்தி என்பெருக்கூமத்து
மிலைச்சென்னி அம்மைநாதர் விடையின்மேல் எதிரேவந்தார்

"கண்டிரு கண்ணீர்வாரக் கசிந்துநற்றுதிகள் செய்து
கொண்டபே ருவகையோடும் குழகனைப்போற்றி நின்றான்
அண்டர்நாயகனும் நோக்கி அருந்தவ முனிநீ வேண்டும்
எண்டிசை புகழும் நித்யம் உதவினோம் என்றுபோந்தான்.

அண்ணலார் மறைந்தபின்புஅங் கருந்தவமுனிவன் அந்த
வண்ணநித்தியமும் பெற்று வளம்பெறா லயத்தைச் சூழ்ந்தே
நண்ணியங்குறையும் அம்மைநாதனை உமையாளோடும்
புண்ணியன் உள்ளம் போற்றிப் புகழ்ந்தினிதுவந்து
போந்தான். 23

"செய்யஅத் தீர்த்தப்பேரும் உரோமச தீர்த்தமாகும்
உய்வகை உதவுதானம் உரோமச நகரமாகும்
மெய்ம்மையே யாவரேனும் விருப்பொடு தீர்த்தம் ஆடிக்
கைம்மழுவானைக் காண்போர், கதியினைக் காண்பார்
மெய்யே. 25

"மாலயன் முனிவர் சித்தர் மதுரவிஞ் சையர்விண்ணோர்கள்
காலனைவெல் மார்க்கண்டர் கார்த்தவீரியன்வாழ் நந்தி
சீலநற்குறிய கும்பன் சித்தரின் னோர்கள் வந்தே
ஏலுமத்தீர்த்தமாடி ஏத்திநல் வரங்கள்பெற்றார். 25

"பூதலத்தூடு போந்த பொருநையின் புடையூடேகிப்
பாதலத்தூடுதோன்றும் பரமனைச் சூழ்ந்து பன்னாள்
காதலோடிரண்டு மச்சம் களிப்பொடு கருதிப்போற்றி
வேதனைநீங்கி இன்ப வீடுபெற் றுயர்ந்த தாமால்.

## அருச்சனை, திருவிழா

இரண்டறு, நான்கறு, ஆறறுக் கட்டணங்கள் பெற்று முறையே நூற்றெட்டு, முந்நூற்றெட்டு, ஆயிரத் தெட்டு ஆகிய அருச்சனைகள் செய்யப்பெறுகின்றன. சித்திரை விசுவன்று தீர்த்தவாரி நடைபெறும் பங்குனித் திருவிழாவே பெருந்திருவிழா. இக்கோவிலுக்குத் திருக்குடமுழுக்கு (கும்பாபிசேகம்) கொல்லம் 1092-ம௵ தைமீ 21உ வெள்ளிக்கிழமை நடைபெற்றது. திருக்கலியாணத் தன்றும், ஆண்டு முழுக்கு (வருசாபிசேகம்) அன்றும் அம்மைநாதர் ஆவுடையம்மையுடன் ஊருக்குள்ளே எழுந்தருளிக் காட்சி தருவார்; பிறநாட்களிலெல்லாம் திருகோவிலைச்சுற்றி வந்து அருள்புரிவார்.

## சா. ஆட்சி.

சென்னை இந்து அறநிலையக் காப்புக்கழகத்தால் நியமிக்கப்பெறும் ஆட்சியாளர் ஒருவருடைய ஆளுகையில் இக்கோவில் இருந்து வருகிறது. இவ்வூரிலுள்ள அப்பன் வேங்கடாசலபதி கோவில், தெய்வீசரமுடையார் கோவில், இராமசாமிகோவில், வைத்தியநாதர் கோவில், நடுவுள் அப்பர் கோவில், செங்கோடையன் சாத்தாகோவில், சாத்துப்பால்விநாயகர் கோவில், எட்டுச்சாத்தா கோவில்கள் என்பனவும் அந்த ஆட்சியாளருடைய பார்வையிலேயே இருந்து வருகின்றன.

## எ. வரவு செலவு

**திட்டம்**

பசலி 1354லின் வரவு செலவுத் திட்டம் பின் வருவது:—

வரவு

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| குத்தகை | 79 | 0 | 0 |
| நஞ்சை | 3097 | 0 | 0 |
| கட்டளை | 28 | 8 | 0 |
| அரசர் கொடை | 391 | 4 | 11 |
| மாணிபம் | 26 | 1 | 0 |
| வட்டி | 45 | 8 | 0 |
| பிற | 5 | 0 | 0 |
| ஆக ரூ. | 3672 | 5 | 11 |

## செலவு

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பணியாள் | 900 | 0 | 0 |
| படித்தரம் | 500 | 0 | 0 |
| திருவிழா | 800 | 0 | 0 |
| மராமத்து | 235 | 0 | 0 |
| தீர்வை | 477 | 0 | 0 |
| வாகனம் | 25 | 0 | 0 |
| கல்வி | 35 | 0 | 0 |
| பாதுகாப்புக் கழகம் | 110 | 0 | 0 |
| தணிக்கை | 55 | 0 | 0 |
| பிற | 55 | 0 | 0 |
| காப்புத் தொகை | 480 | 5 | 11 |
| ஆக ரூ. | 3672 | 5 | 11 |

## சொத்துக்கள்

| | | | |
|---|---|---|---|
| 13—6—1944ல் அஞ்சல் நிலையக் காப்பு நிதியில் இருப்பு ரூ. | 3969 | 5 | 6 |
| போர்ப்பத்திரம் (War bond) | 1007 | 1 | 4 |
| கடன் பத்திரம் (Cash certificate) | 300 | 0 | 0 |

வீடு ஒன்றும், தோட்டம் ஒன்றும், சில தோப்புகளும் இருக்கின்றன. அம்பாசமுத்திரம் தாலுகாவைச் சேர்ந்த சேரன்மாதேவியிலும் சங்கன் திரட்டிலும், திருநெல்வேலித் தாலுகாவைச் சேர்ந்த மேலக்கல்லூரிலும் நிலச்

சொத்துக்கள் உள. உயர்ந்த நஞ்சை நிலங்கள் 22 ஏக்கர் 43 செண்டும், புஞ்சை நிலங்கள் 98 ஏக்கர் 85 செண்டும் இருக்கின்றன; இவைகளின் மதிப்பு விலை ரூ. 45000.

| | | | |
|---|---|---|---|
| வாகனங்கள் மதிப்பு விலை ரூ. | 740 | 4 | 0 |
| நகை | 3774 | 5 | 0 |
| பாத்திரங்கள் | 1285 | 2 | 10 |
| பட்டுப் பரிவட்டம் | 280 | 0 | 0 |
| பிற பொருள்கள் | 322 | 8 | 0 |

**கட்டளைகள்.**

| | | ஏ. | செ. |
|---|---|---|---|
| 1. | ஆவுடையம்மாள் தவ இருப்புக் கட்டளை | 0 | 42 |
| 2. | நவராத்திரிக் கட்டளை | 0 | 71 |
| 3. | ஆவுடையம்மாள் உச்சிக் காலக் கட்டளை | 0 | 54 |

## அ. சரித்திர வரலாறு

**சேரன்மாதேவி**

**சேரன்மாதேவி சதுர்வேதிமங்கலம்** என்ற பெயர் இவ் வூரில் உள்ள கல்வெட்டுக்களில் நான்கு கோவில்களிலே காணப்பெறுகிறது. அவை காலம் கூற முடியாத பாண்டியர்கள் கல்வெட்டுக்கள். சேரமன் மாதேவி என்பதுதான் சேரன்மாதேவி என இப்போது வழங்கி வருகின்றது. ஆதலின் இவ்வூர் ஒரு காலத்தில் சேரமன்னருடைய ஆளுகையில் இருந்து வந்தது என்பது வெளிப்படை.

**கல்வெட்டுக்கள்**

இவ்வூரில் 1895ல் 16ம் 1911ல் 18ம் 1916ல் 107ம்ஆக மொத்தம் 141 கல்வெட்டுக்கள் எடுக்கப்பட்டுள்ளன. சேரன் மாதேவி இராசராசபாண்டி நாட்டு உத்தம சோழவளநாட்டு முள்ளிநாட்டு பிரமதேயம் நிகரிலிசோழ சதுர்வேதிமங்கலம் என்னும் விவரத்துடன் கூறப்பெறுகிறது. இப்பகுதி முள்ளிநாடு என்பதும் சேரன்மாதேவி நிகரிலி சோழ சதுர் வேதிமங்கலம் என்று பெயருடையதென்பதும் புலனாகின் றன. 1895ல் எடுத்த எண் 192, 193, 194 கல்வெட்டுக் கள் முறையே இக்கோவிலின் தெற்குச்சுவரிலும், மேற்குச் சுவரிலும், தெற்குச் சுவரிலும் உள்ளவை; அவைகளில் பெருமான் கயிலாயத்து ஆழ்வார் என்றும் கயிலாயமுடை யார் என்றும் கூறப்பெறுகிறார். கோச்சடைய வர்மரான சுந்தரசோழபாண்டியர் என்ற அரசர்காலமும், இராசராசகே சரிவர்மரான இராசராசதேவர் என்ற மன்னர் காலமும் குறிப்பிடப்படுகின்றன. இராசராசதேவர் காலக் கல்வெட்டு இராமசாமிகோவிலிலும் உளது.

இக்கோவிலுக்கு மேற்கேகூப்பிடுதூரத்திலுள்ள பக்தவத் சலர் கோவிலிலுள்ள கல்வெட்டுக்களில் கோச்சடையவன்ம ரானதிரிபுவனச் சக்கரவர்த்திகள் குலசேகரதேவர் பெயரும், குலோத்துங்க சோழதேவர் பெயரும் குறிப்பிடப்பெற்றுள் ளன. 1895 எண் 189-வது கல்வெட்டில் இக்கோவில் "தண்பொருந்தத் தென்கரை" யில் இருப்பதாகப் பொறிக் கப்பெறுகிறது. அதனால் அக்காலம் ஆறு தண்பொருந்தம் என்று வழங்கப்பெற்று வந்தது காண்க. தண்பொருந்தம்

தண்பொருநை என்றும் வழங்கப் பெறுகிறது. தண்பொருநையே உச்சரிக்க முடியாத பிறமொழியாளரால் தாம்பிரபர்ணியாக்கப்பட்டது. ஒத்தைக்கல் மந்து என்பது உதகமந்து, உதகமண்டலம் என்று ஆனது போன்றதே இது.

நமது அம்மைநாதர் கோவிலில் 1916-ல் எடுத்த எண் 612 முதல் 644 முடிய உள்ள கல்வெட்டுக்களின் சுருக்கம் பின் வருமாறு :—

அம்மைநாதசாமிகோவில் வடக்குச்சுவர்

612 — சடாவர்மன் சுந்தரபாண்டிய தேவன் — கைலாசமுடையாருக்கு நிகரிலி சோழ சதுர்வேதி மங்கல சபையார் நிலம் விற்றது.

613 — மாறவர்மன் என்ற உடையார் பராக்கிரம சோழ பாண்டிய தேவர் — இராசராச பாண்டிய நாட்டில் உத்தம சோழ வல்ல நாட்டின் பிரிவாகிய முல்லைநாடு பிரமதேயம் நிகரிலி சோழ சதுர்வேதி மங்கலத்திலுள்ள கைலாசமுடையாருக்கு விளக்குக்குப்பணம்.

614 — சோழன் பரகேசரிவர்மன் என்ற இராசேந்திர சோழ தேவன்.

615 — சடாவர்மன் உடையார் சுந்தர சோழ பாண்டிய தேவர் — சோழேந்திர சிங்க ஈசுவரமுடையார் கோவில் குறிக்கப் பெறுகிறது.

616 — மாறவர்மன் என்ற உடையார் விக்கிரம சோழ பாண்டிய தேவர் — நிகரிலி சோழ சதுர்வேதி

மங்கலம் கைலாசமுடையாருக்குச் சபையால் நில விற்பனை.

617 — சடாவர்மன் சுந்தரசோழபாண்டியன்.

618 — சடாவர்மன் சுந்தரசோழ பாண்டியன்—விளக்குக் கொடை.

வடக்கு மேற்கு தெற்குச் சுவர்கள்

619 — உடையார் சுந்தர சோழபாண்டிய தேவன்—மேல் வேம்ப நாட்டிலுள்ள கல்லூர் நிலத்தீர்வையைத் தள்ளுபடிசெய்தது.

மேற்குச்சுவர்

620 —மாறவர்மன் உடையார் விக்கிரம சோழபாண்டிய தேவன் — கைலாசமுடைய மகாதேவர் விளக்கின் பாதிச்செலவுக்கு ஆடுதந்தது.

தெற்குச்சுவர்

621 — சடாவர்மன் உடையார் சுந்தர சோழபாண்டிய தேவன்.

622 — சடாவர்மன் உடையார்சுந்தர சோழபாண்டியதேவன்

623 — மாறவர்மன் உடையார்.

624 — இராசராசதேவன்.

625 — சடாவர்மன் உடையார் — கைலாயமுடைய மகா தேவர் — கைலாயத்தாழ்வார்.

626 — இராசராசன் (!).

627 — மாறவர்மன் உடையார் விக்கிரம சோழபாண்டிய தேவன்.

628 — மாறவர்மன் உடையார் விக்கிரம சோழபாண்டிய தேவன்.

629 — இராசராச கேசரிவர்மன் — இராசராசதேவன் (!)

630 — சடாவர்மன் உடையார் சுந்தரசோழபாண்டியதேவன் — கல்லூர் நிலங்களின் பெயர் சிவபாதசேகரநல்லூர்.

## முன்மண்டபம் கீழ்சுவர்

631 — சடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகர தேவன்—சேரவன்மாதேவி சதுர்வேதிமங்கலம்.

632 — சடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகர தேவன் — தராசுகளின் பெயர்—கைலாச முடையார்.

633 — சடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகர தேவன்.

## முன்மண்டபம் வடசுவர்

634 சடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகர தேவன்.

635 — சடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகர தேவன்.

636 — திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரி மெய்கொண்டான்.

முன்மண்டபம் மேற்குச்சுவர்.

637 — திரிபுவனச்சக்கரவர்த்தி கோனேரி மெய்கொண்டான்.

முன்மண்டபம் தெற்குச்சுவர்

638 —

637 —

தெற்கணுமூர்த்தி கோவில் கீழச்சுவர்

640 — நிகரில் சோழ சதுர்வேதிமங்கலம் — சோழேந்திர சிங்க ஈசுவரம், கைலாசம் ஆகிய கோவில்கள் குறிக்கப் பெற்றுள.

641 —கைலாசமுடைய மகாதேவர் சேரவன்மாதேவி சதுர்வேதி மங்கலம்.

தெற்கணுமூர்த்திகோவில் மேற்கு வடக்குச் சுவர்கள்

642 — சடாவர்மன் உடையார் சோழபாண்டியதேவன்— இராசேந்திர சோழபுரத்தில் சிங்காசனத்திலிருந்து கல்லூர்ச் சில நிலங்களைத் தீர்வையிலவாக்குகின்றான்—முடிகொண்ட சோழப் பேராற்றின் தென்கரை.

**கிழக்கு வெளிப்பத்தித் தரைப்பூக்கல்.**

643 — *இக்கல் செய்தவன்.*

**முதற் சுற்றின் வாயில் வலதுபுறம்.**

644 — *சடாவர்மன் உடையார் சீவல்லவதேவன் — சேரவன்மாதேவி • சதுர்வேதி மங்கலத்து — விளக்குக்கு 50 ஆடு.*

*கணேசன் அச்சுக்கூடம், திருநெல்வேலிப் பாலம்—44.*

கணேசன் அச்சுக்கூடம், திருநெல்வேலிப் பாலம்—'44.